செ.வெ.எண்- 06 நாள்- 02.11.2026

பத்திரிக்கைச் செய்தி

பல்நோக்கு பண்ணைக் குட்டைத் திட்டத்தில் மீன் வளர்ப்பு செய்து பயன்பெறலாம்:மாவட்டத்தில் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்து மீனவ விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்திட மீன் குஞ்சுகள், மீன் தீவனம், உரங்கள், பண்ணைக் கருவிகள் மற்றும் பறவைகள் பாதுகாப்பு வலைப்பைகள் ஆகியவற்றின் செலவிற்காக ஒரு பண்ணைக் குட்டைக்கு ரூ.20,000/- வீதம் 50 சதவீத உள்ளீட்டு மானியம் வழங்கப்படும். மேற்காணும் மீன்வளர்ப்புத் திட்டத்தில் பயன் பெறுவதற்கு கீழ்க்காணும் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது.

நீர் ஆதாரத்திற்கான மாற்று அல்லது உறுதி ஆதாரம் உள்ள பயனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் மாவட்ட மீன் விவசாயிகள் மேம்பாட்டு முகமையின் உறுப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டும். மீன் வளர்ப்பிற்கான இடுபொருட்களை வாங்கியதற்கான செலவின ஆவணங்களின் அடிப்படையில், மண்டல அளவிலான ஆய்வு மற்றும் கண்காணிப்புக் குழுவின் ஒப்புதலுடன் பின்னர் வழங்கப்படும் மானியமாக (Back-ended Subsidy) மானியத் தொகை விடுவிக்கப்படும். விண்ணப்பத்துடன் முகவரிச் சான்று, பண்ணை விவரங்கள், நில ஆவணங்கள் மற்றும் தொடர்புடைய இதர ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பங்கள் பெறப்பட்ட பின்னர், பண்ணைக் குட்டையின் உரிமை மற்றும் மீன் வளர்ப்பு நிலைப்பாடுகளைச் சரிபார்த்து, விண்ணப்பதாரரின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த கள ஆய்வு மேற்கொள்ளப்படும். கள ஆய்வுக்குப் பின்னர், பயனாளிகள் சமர்ப்பிக்கும் மீன் குஞ்சுகள், மீன் தீவனம், உரங்கள் மற்றும் பசுமை நிழல் வலை / பறவைத் தடுப்பு வலை / குட்டை அடித்தளப் பூச்சு வசதிகள் தொடர்பான கொள்முதல் ரசீதுகள் சரிபார்க்கப்பட்டு, மானியத் தொகை விடுவிப்பதற்காகக் குழுவால் பரிந்துரைக்கப்படும். மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநரின் ஒப்புதல் பெற்ற பின்னர் பயனாளிகளுக்கு மானியத் தொகை விடுவிக்கப்படும். மானியத் தொகையானது நேரடி பணப் பரிமாற்றம் (DBT) முறையில் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு ஈரோடு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கூடுதல் கட்டடம், 7வது தளம், பெருந்துறை ரோடு, ஈரோடு 638 011 தொலைபேசி எண்: 0424 2221912-ல் (அலைபேசி எண்: 7708776140) தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.எனவே, விருப்பமுள்ளவர்கள் 15.11.2026-க்குள் விண்ணப்பித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பவன்குமார் க.கிரியப்பனவர் இ.ஆ.ப., அவர்கள் , தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கோயம்புத்தூர் மாவட்டம்.

கோயம்புத்தூர் மாவட்ட அரசு செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள:

collectorCoimbatore collectorCbe Pro Cbe cbe_pro prokovai22